https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சாகித்ய அகாதெமி விருது பெற்ற அம்பையின் பெண்ணியப் பார்வை

**சே. தீபா**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை

**முனைவர் கோ. பவானி**
உதவிப்பேராசிரியர், நெறியாளர்
தமிழியல் துறை அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்-608 002

**ஆய்வுச் சுருக்கம்**

பெண்ணியம் என்பது பெண்களை தாழ்வுப்படுத்தும் சமூக, அரசியல், பொருளாதார, நடைமுறைகள், கட்டமைப்புகள் மற்றும் சமத்துவமின்மையை எதிர்க்கும், கவனப்படுத்தும் சமூக, கலாச்சார, அரசியல் இயக்கங்கள், செயற்பாடுகள், கோட்பாடுகளின் தொகுப்பாகும். ஆண் பெண் சமத்தவத்தில் கவனம் செலுத்தும் கோட்பாடாகவும் இது வரையறுக்கப் படுவதுண்டு. பெண்ணியத்தை வரையறுப்பதென்பதே கூட சிக்கலானதாக இருப்பதுண்டு.

தற்காலப் பெண்ணியவாதிகள் பெண்ணியத்தை இன சமூக, கலாச்சார, மத எல்லைகளைக் கடக்கும் அடிப்படை இயக்கமாகக் கருதுகின்றனர். ஒரு திறன்மிக்க பெண்ணிய இயக்கமானது வன்புணர்ச்சி, தகாப்புணர்ச்சி, பாலியற் தொழில் போன்ற பொதுப் பிரச்சினைகளையும், குறித்த சமூகங்களுக்குரிய சிறப்புப் பிரச்சினைகளையும் கவனத்திலெடுக்க வேண்டும் என்று அம்பை தனது படைப்புகளின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

**முன்னுரை**

பெண்களுக்காக பெண்கள் பேசும் பெண்ணிய இலக்கியங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றன. அவ்வையார் துவங்கி காரைக்கால் அம்மையார் வரை தமிழில் பல பெண் எழுத்தாளர்கள் இருந்து உள்ளனர். பெண்களின் அனுபவங்களைக் கொண்டு அவள் வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்று பெண்ணியம் பேசும் பெண் எழுத்தாளர்கள் பலர் உள்ளனர்.

‘பெண்ணியம்’ என்றாலே ‘ஆண்களை எதிர்ப்பது’ என்ற எண்ணம் சமூகத்தில் பரவலாக நிலவி வருகிறது. உண்மையில், பெண்ணியத்தின் நோக்கம் அது அன்று. காலம் காலமாக அடிமைப்பட்டு, வதைப்பட்டு வாழும் பெண்களை அடிமைத் தளையிலிருந்து மீட்டு, இவர்களுக்கும் கல்வியின் மூலம் விழிப்புணர்வு ஊட்டி, சமூகத்தில் ஆண்களுக்கு இணையான மதிப்பிணைப் பெற்றுத் தருவதே, பெண்ணியத்தின் நோக்கமும் செயற்பாடும் ஆகும். இந்த இலக்கை அடைய ஆண்கள் தடையாகும் போது மட்டுமே அவர்கள் எதிரியாகின்றனர் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அம்பை (சி.எஸ். லட்சுமி)**

அம்பை என்பது சி.எஸ். லட்சுமியின் புனைப்பெயர். தமிழின் சிறந்த பெண் படைப்பாளிகளில் ஒருவர். 1960களின் பிற்பகுதியில் எழுதத் தொடங்கியவர். பெண் நிலை

நோக்கினை வெளிப்படுத்தும் வகைமையிலான தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடி. பல பெண் படைப்பாளிகள் தொடரச் சிரமப்படும் விடயங்களை சர்வ சாதாரணமாக தொட்டுச் சென்றவர். உறவு, காதல், திருமணம், அரசியல், இசை என்று பல்வேறு பரிமாணங்களைத் தொட்டவர். இவரது கதைகளில் பெண்களின் உறவுச் சிக்கல்கள், பிரச்சினைகள், குழப்பங்கள், கோபதாபங்கள், சமரசங்கள் யாவும் காலப்பூர்வமாக வெளிப்படுத்துகின்றன.

1944இல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பிறந்தார். 1976இல் திரைப்பட இயக்குனரான 'விஷ்ணு'வைத் திருமணம் செய்துக் கொண்டார். திருமணத்திற்குப் பின்னர் கணவருடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி குழந்தை பெற்றுக்கொள்வதில்லை என முடிவு செய்தார்.

பொருளாதார காரணங்கள் மட்டுமின்றி படைப்பு மற்றும் அவர் தேர்ந்தெடுத்த சமூகப் பணிகளுக்குக் குழந்தைகளை உள்ளடக்கிய குடும்ப அமைப்பு தடையாக இருக்கும் என்பது அவரது கருத்தாக இருந்தது. பின் மூன்று வளர்ப்பு குழந்தைகள் 'கிந்து, கோலு, ஸோனு' இருந்தனர்.

லட்சுமி என்னும் தன் பெயரை அம்பை என புனைப்பெயராக மாற்றிக் கொண்டார். அம்பை ஒரு தாய்த் தெய்வத்தின் பெயர். இவர் நல்ல கதைகள் எழுதத் தொடங்கிய போது சூட்டிக் கொண்ட பெயர் அம்பை. அடக்கு முறைக்கு எதிரானது அம்பை குரல்.

## பெண்ணிய சிந்தனையில் அம்பை

1975ஆம் ஆண்டு முதல் பல நாவலாசிரியர்கள் தங்கள் எழுத்தில் பெண்ணிய சிந்தனைகளை எழுதத் தொடங்கினர். குறிப்பாக வாஸந்தி, அனுராதா, ரமணன். ஜோதிர்லதா, கிரிஜா போன்ற பெண் எழுத்தாளர்கள் தங்கள் நாவல்களில் பெண் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு எழுதத் தொடங்கினார்.

## சமூக நிலையில்

வாஸந்தி பட்டணத்தில் வாழக்கூடிய நவநாகரிகப் பெண்களின் உளவியல் சார்ந்த பிரச்சினைகளை ஆராய்ந்து, தன் படைப்பு களில் படைத்துள்ளார். "அவள் லால் பாக்கில் தீபக்கின் மடியில் படுத்து சுவாரஸ்ய மாக எதையோ சொல்லிச் சிரித்தாள்"[1] இவர் சமூக நிலையில் வரதட்சனை ஆண் பெண் நட்பு, பெண்கள் பாலியல் பிரச்சினைகளை போன்றவற்றைப் பற்றி சிந்தித்து எழுதியுள்ளார்.

எண்பதுகளில் காவேரி, அம்பை போன்ற பெண் எழுத்தாளர்கள் பெண்ணியக் கோட்பாட்டை அடியொற்றி உரத்த சிந்தனை யோடு எழுதத் தொடங்கினார். அம்பையின் 'சிறகுகள் முறியும்', 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' என்ற சிறுகதைத் தொகுப்பு க்கள் இக்கோட்பாட்டை அடியொற்றின. "அவளுக்கும் மனம் இருந்தது, சிந்தனை இருந்தது. புழுவாக மற்றவர்கள் நடத்தினா லும் வாழ வேண்டும் என்ற துடிப்பும் இருந்தது."[2]

## பெண் விடுதலை சிந்தனையில்

பெண் உடைமைப் பொருள் அன்று; அவளும் ஓர் உயிர்; தனக்கு என்று தனி விருப்பங்களும், சுயமரியாதையும் உடையவள் என்பதை அவர் படைப்புகள் வற்புறுத்திக் கூறுகின்றன.

**"வந்த கணவன் மகிழும் வண்ணம்**

**குளிர் புனல் காட்டில் குளிக்கச் சொல்லித்**

**துளிதேன் சூழும் களிவண்டு போல"[3]**

என்பதை போல கணவனுக்காகவும், குடும்பத்துக்காகவும் வாழும் பெண்களே அதிகம். பெண்கள் கணவன் என்கிற உறவுக்காகத் தன்னை அழித்துக் கொள்வதோ, எல்லாவற்றையும் முழுமையாகத் தியாகம் செய்வதோ, அடங்கிப் போவதோ தேவை யில்லை என உரிமைக்குரல் எழுப்புகிறார் அம்பை. மேலும் அவரின் சிறகதைகளும், 'உணர்வுகள் ஒடுக்கப்பட்டு வாழ வேண்டிய நிர்பந்த நிலையை' எதிர்த்துக் குரல் கொடுக்கின்றன. இவரது இலக்கியப்பார்வை உறுதியான தெளிவானப் பாதையாக அமைந்துள்ளது.

**"பெண்களுக்கான உரிமை சுதந்திரப் பற்று இன்று பலராலும் விரிவாகப் பேசப்படுகிறது. பெண் அமைப்புகளால் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகிறது."[4]**

சிறுகதைகளின் மூலம் பெண் விடுதலைப் பற்றித் தீர்க்கமான குரல் எழுப்புதலே இவரது அடிப்படைக் கொள்கையாகும். சொல்ல வந்ததைத் தீவிரமாகச் சொல்லல், மனதில் பட்டதை அப்படியே எழுத்தில் வடித்தல், **"என்ன மமதை, என்ன அகங்காரம்! அதோடு கலரைப்பாரு, தங்கக் கலர் அம்மா! ஆண்களின் கலை ஞானத் தால் இவ்வாறு கற்பனை செய்து எழுத முடியும்."** இப்படியாக எழத்துக் கூச்சமின்மை, எழுத்தில் ஆண், பெண் பேதமின்மை என்பன பிற இலக்கியப் படைப்பாளர்களில் இருந்து இவரைத் தனித்து காட்டுகின்றன.

பெண்கள் பீனிக்ஸ் பறவையைப் போன்றவள். பெண்கள் சாகமுடியாது, ஏனென்றா அவர்கள் வாழவில்லை என்று குமுறுவதும் உண்டு.

### சமையல் அறையில் அவள்

**"செம்பு தவலை செழும்பொன் ஆக்கினாள் கைம்புணல் தேக்கினாள், பற்ற வைத்த அடுப்பினில் விளைத்த அப்பம் அடுக்கிக் குடிக்க இனிய கொத்துமல்லி நீர் இறக்கிப் பாலொடு சர்க்கரை இட்டு இப்படி எல்லாம் பெண்ணைக் காட்டியுள்ளார்"**[6] பாரதிதாசன். வீட்டில் தன் கடமைகளை செய்யும் பெண்கள் அடுப்பில் வேகும் பொருள் அப்பம் மட்டும் அல்ல அந்த பெண்ணும் தான். வருடத்திற்கு ஏழாயிரத்து முந்நூறு தோசைகள் இது தவிர இட்லிகள், வடைகள், அப்பளங்கள், பொரியல்கள். குழம்புகள், எவ்வளவு கிலோ அரிசி சமைத்திருப்பாள் என்று பெண்ணின் வாழ்வை வருத்தத்துடன் கணக்கிடும் அம்பை, பெண்கள் மூளையில் இழப்பறையில் மட்டன், புலவு, மசாலா, பூரி, உப்பு, சர்க்கரை, பால், எண்ணெய், நெய் என்று இவற்றைப் போட்டு நிரப்பியராகி விட்டாள்.

ஒரு வேலை அந்த ஆப்பிள் விழுவதைப் பார்த்திருக்கலாம். தண்ணிர் கெட்டிலின் மூக்கு நுனி ஆவியைப் பார்த்திருக்கலாம். புதுக்கண்டங்களைக் கண்டு பிடித்திருக்கலாம். கைலாஸ பர்வதத்தில் அமர்ந்து காவியம் எழுதியிருக்கலாம், குகைக்குள் ஓவியம் தீட்டியிருக்கலாம், படித்திருக்கலாம், போர் கள், சிறைகள், தூக்க மரங்கள், ரஸாயன யுத்தங்கள் இல்லாத உலகத்தை உண்டாக்கி இருக்கலாம் என்கிறார் அம்பை.

அதாவது பெண்களும் ஆண்களுக்குச் சமமாக அறிவியல் வன்கலை மற்றும் அனைத்துத் துறைகளிலும் முன்னேறி இருக்க முடியும். அவர்களை முன்னேறவிடாமல் மழுங்கடித்தது சமையலறையும் வீடும் என்கிறார். இது பெண்ணியப் பார்வையின் சில பரிணாமங்கள் ஆகும்.

அம்பையின் சிறுகதைகளைப் பெண் கோபத்தின் முதல் வெளிப்பாடு என்று சொல்லலாம். வாழ்வின் மீது குவியும் துன்பங்களையும் தன் மீது குவியக் கூடியவையாகக் கண்டு வருத்தம் கொள்ளும் பெண்மையின் உலகம், சிறுகதைப் பரப்பில் அம்பையின் தனித்துவமான அடையாள மானதும் ஆழ வேரூன்றியதும் முன்னிலை வகிப்பதுமாக இருக்கிறது. முன்னோடியான வராகவும், புனைகதையாளராகவும், ஆண், பெண் என்ற பிரிப்புகளுக்குள் நிற்காதர வராகவும், எல்லைகள் வரையறைகள் அல்லது பேணப்பட்ட வழக்கங்களுக்கு அப்பாலுக்கு அப்பால் பயணித்தவராகவும், அம்பை தன்னை நிறுவ எழுத்துக்களின் மூலம் தொடர்ந்து முயன்று வருபவர்.

### ஊடுருவிய பார்வை

காட்டின் இருளில் மெல்லக் கசியும் மூலிகை வாசனையை காற்றுச் சிறுகச் சிறுக அவிழ்த்து விசிறுவது பல கதைகளின் வழியில் அம்பை வசனங்களை தோற்றுவிக்கி ன்றார். ஒருவகை இசைத் தன்மையான அந்த அலைகள் அவரது மொழியைத் தூக்கப் பறக்கின்றன. நெகிழ்த்தியும், இறுக்கி யும், பிணைந்தும், விலகியும், தோன்றி மறையும் ஈர அலைகளாக மனங்களின் உள்ளார்ந்த அடுக்குகளின் கீறப்பட்ட சுவரோவியங்களின் சிதிலங்களையும் தாண்டி கலைத்துவமான சித்திரங்களை ஊடுருவி நோக்கும் அவரின் பெண்ணியப் பார்வை.

சொல்லாமல் சொன்னவற்றின் வெம்மையும் அந்தரத்தில் விடப்பட்ட மௌன வெளியின் குளிர்வறைப்பு நிச்சலத்தின் முன் நிறுத்து கின்றன. பெண்ணின் முழுப்பரிமானத்தையும் கதை சொல்பவரின் ஆழ்ந்த தரிசனங்களை யும் வாழ்க்கையை பிரச்சனையோடு எதிர் கொண்டவற்றைப் பெண்ணொருவரின் சாகசத்திற்கும் அனுபவங்களுக்கும் இடையே காணும் உருமாற்றங்களையும் அம்பையின் எழுத்துக்கள் நிகழ்த்துகின்றன.

**"தன்னிச்சைப்படி ஆடியவள் அகிலத்தையே மிருதங்கத்தில் காட்டிய அவளை விட ஐந்து வயது இளைய ராசப்பாவுடன் திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்க்கையை வாழ்ந்தவள்"**[7] பயணம் 21 என்னும் தன் கதையில் காட்டியுள்ளார். தொன்று தொட்டு முன்னெடுத்து வரும் பழக்கங்களை ஒடுக்கும் முறைகளை சுக்குநூறாக உடைத்தெறிகின்றன.

### ஆளுமை பார்வையில்

அம்பை தன் சிறுகதைகளில் வலியுறுத்துவது தன் நம்பிக்கையின் அடிப்படையிலான அற உணர்வே ஆகும். நன்மை, தீமை என்ற பிரிப்புகளற்ற இடத்தில் அம்பை தன் கதைகளோடு நிற்கிறார். அதுதான் அவரது பெருமிதம். தன்னை அதனூடாகவே எழுத்திற்கு அர்ப்பணித்திருப்பவர் அம்பை. பெண்மை அதன் முழு அர்த்தத்தில் வெளிக்கொணருகின்ற அதே சமயத்தில் பெண்ணானவள் தன் சுயநலத்தை மிட்டு தக்க சமயத்தில் முடிவுகளை எட்டக்கூடிய ஆற்றலுடன் பெண்களை அடையாளப் படுத்துகின்றார். அவரது கதைகள், அவர் முன் வைக்கும் கேள்விகள் முக்கியமானவை யாகும். பெண்கள் பற்றிய மதிப்பீடுகளை எழுத்தின் மூலமும் செயற்பாட்டின் மூலமும் நிர்ணயம் செய்கிறார். விரிவான சமூக மாற்றங்கள் இடம்பெற்ற இன்றைய காலத்திலும் 'காவுநாள்' கதையில் "நான் புடவை கட்டிட்டு தான் போனேன்.

தம்பிக்கு இந்த உடையெல்லாம் அவ்வளவாப் பிடிக்காது. தமிழ்ப் பண்பாடுன்னுட்டு ஒண்ணு இருக்குதோ? எதுக்கும் தம்பிய ஒரு வார்த்தைக் கேட்டுடு"[8] இப்படியாக பெண்கள் நம் கண்முன்னே மாறுதலுற்றும் ஒலிகளற்றும் நம்மருகிலேயே உள்ளனர். அம்பையின் நுணுக்கமான இந்தப் பின்னல் இணைப்பு அவரது சுயம் சார்ந்த ஆளுமையின் அப்பாற்பட்டது எனலாம்.

கற்பு பற்றிய கற்பித்தல்களும், கருத்து நிலைகளும் பால் தன்மை பற்றிய புரிதல் கொண்ட அம்பையின் கதையில் பெண்கள் கொண்டுள்ள தீர்மானங்கள் அன்றைய நாளில் எவ்வளவு சவால் மிகுந்ததாக இருந்திருக்கும். "மிக செம்மையாகச் சூரியனின் கிரணம் முகத்தைத் தொட்டதும் பதறி எழுந்தான். சிதறிக் கிடந்த உடைகளை அணிந்த போது கீறல்களும் காயங்களும் குருதியுமாய்க் குலைக்கப்பட்ட உடலைப் பார்த்ததும் கண்ணீர் பெருகியது"[9] கற்பிற்கு பாதுகாப்பற்ற நிலையை நுணுக்கமாக பொய்கை என்னும் கதையில் காட்டியுள்ளார். இவர் பெண்ணாக இருப்பதற்காகவே மிகுந்த புறக்கணிப்புகளையும், எதிர்ப்புகளையும் எதிர்கொண்டிருப்பார் என்பதை பூரணமாக உணரமுடிகிறது.

## உடலும் மனமும்

"பாரு சகு, நாம சேர்ந்து இருந்தது ஒரு சந்தர்ப்பவசமான விஷயம்தான். சில சமயம் அப்படி நேர்ந்து போயிடறதுதான். எதிர் பாராம சில விஷயங்கள் நடந்திடுது. நெருங்கிப் பழகின ஒவ்வொரு பெண்ணையும் கல்யாணம் செய்துக்க மடியுமா?"[10] 'நிலவைத் தின்னும் பெண்' சிறு சிறுகதைகளில் அப்பெண் எதிர் கொள்ளும் காதலும், துரோகமும், பெண்ணின் வாழ்க்கையில் முக்கியமான அனுபவப் பகுதியைக் காண்பிக்கின்றது. கதை நிகழும் கணமும் களமும் கண் முன்னே துல்லியமாகத் தெரியும் விதம் அந்நியோன்யமான உணர்வு மொழியில் எழுதியிருப்பார். மேலும் இக்கதையில் பெண் உடல் பற்றிப் பேசுகிறார். மென்மையான பட்டு நூலிழைகளால் அங்கே பெண் உடலை பின்னுகிறாள். படிக்கக் காச்சும் தீயின் கங்குகளால் நமக்கும் அவ்வனல் வெம்மை தாவுகின்றபடியாக நிலவைத் தின்னும் சிறுகதையில் ஒரு முதிர்ந்த பெண், இளம் பெண்ணுக்கு எழுதும் கடிதத்தின் சிறு பகுதியை இங்கு காட்டப்பட்டுள்ளது.

அதனால் எல்லாவற்றையும் பிரி, கலை - கலைஞர், இரவு - நிலவு, பகல் - சூரியன், ஒலி - இசை எல்லாவற்றையும் பிரிதெற்குள் எதுவெனத் தெரியாமல் கலந்து கிடக்கும். அதைப் பிரிக்கும் போது அவை ஒட்டியும் ஒட்டாமலும் இருப்பது தெரியும்.

பெண் தாய்மை இதையும் பிரி, அவை பிரிக்க முடியாமல் இணைந்தவை என்னும் பிரதமை இருக்கிறது. அதை உடை, அப்போதுதான் யதார்த்தத்தையும் தற்செயல் நிகழ்வையும் பிரிக்க முடியும். இரண்டுக்கும் வேறு வேறு இலக்கணங்கள்.

பெண் உடல் ஒரு ஆயுதம். அதே நேரம் திறவுகோல் தான் எனும் புதையல் அங்கு உண்டு. முடிவுற்ற விரிவும் புதிருமான சுழற்சியை கொண்டிருப்பதும், கனவுகள் சுதந்திரத்தை உருவாக்குவதும் ஆகும். அதனை கடந்து உயர் சீறிப்பாய்கின்றவளாக உடலே பெண்ணை பழகுகின்றது. 'கைலாசம்' கதையில் வரும் பெண் கமலம் அற்புதமான பெண்மை நிறைந்தவள். "இத்தனை மோகத் திலும் அவள் உடல் வெறும் உறுப்புகள் கொண்ட ஒன்றாக மட்டுமே படவில்லை. சுழித்துக்கொண்டு ஓடும் ஆறாக பறவைகளு க்கு உறைவிடமாகும். ஏரியாக, கொற்தளிக்கும் கடலாக உருபெற்றவாறு இருக்கிறது. அவள் உடல் என் கற்பனையில்"[11] அவனை மணந்து கொண்டு இருப்பத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் காதல் புரியவில்லை கைலாசம் மோகம் புரிவது எளிது, காதல் அப்படி அல்ல. ஆண், பெண் உறவு மிகவும் சிக்கலானது. அதில்தான் எத்தனை மர்மங் கள், எத்தனை வெளிப்படை! எத்தனை வன்முறை, எத்தனை நன்மை, எத்தனை இருக்கம், எத்தனை குழைவு? எத்தனை ஆரம், எத்தனை ஆவேசம் தணிக்கிறது. பந்தம் மேல் கட்டிபோடுகிறது கூடுபோல் ஆசுவாசம் தருகிறது. அம்பையின் நோக்கம் இத்தகைய போக்குகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதாகவோ, தவிர்க்க முடியா மல் இவ்விதம் நேர்ந்துவிடும் அனுபவங்களை வெளிப்படுத்துவதாகவோ இருப்பதாக கருதலாம்.

'அம்மா ஒரு கொலை செய்தால்' கதையை ஒரு ஆணினால் என்றைக்குமே எழுத முடியாது. பருவம் என்றால் என்ன என்ற கேள்வியை யோசிக்காத சிறுமிகள் இல்லை. அந்த கேள்வியில் இருந்துதான் சிறுமிகளின் குதூகலங்களின் மீது விழும் முதலாம் வெட்டுகள் தொடங்குகின்றன. சிறுமிகள் பெரியமனுஷியாகிவிடுக்கின்ற பிற்பாடு தேவதைகள் போன்ற அம்மாக்கள் மனித அம்மாக்களாக ஆகிவிடுகின்றனர். பெண்ணுக்கு பாலுணர்வு என்பது உளவியல் சார்ந்த வியத்தகு நிகழ்ச்சி"[12] பெண் வளர்ச்சி நிர்பந்தங்களுக்கு பருவத்தின் ஆரம்பத்திலேயே பெண் தள்ளப்படுகிறாள். அதனை இக்கதை வலுவாகப் பேசுகிறது.

பெண்ணின் பெண்ணியம்

அம்பையின் பெண்ணியச் சிந்தனையின் கதைக்களங்கள் பல்வேறு அம்சங்களோடு விரிவுடையதாக அவரது பயணங்கள் அமைந்துள்ளது. சவாலான பல விடயங்களையும் அதன் ஊடாக அனுபவங் கைளையும் படிப்பிணைகளையும் பயணங்கள் அவருக்குக் கொடுத்திருக்கின்றன. இத்துணிச் சல் மிக்க பயணங்கள் வேறு பெண்களுக்கு எளிதில் கிடைத்துவிட முடியாது. பெண் எழுத்தாளர்களுக்கு பயணங்கள் வாய்ப்பது மிக அரிதான ஒன்றாகும். அம்பை தன் தொடர்ச்சியான பயணத்தின் மூலம் ஏற்கனவே நிறுவப்பட்ட அனைத்து கட்டு மானங்களையும் தகர்த்தவர். அம்பையின் கதைகள் பெண்ணானவள் சொல்லப் படுகின்ற ரணங்களிலிருந்து மீண்டெழுந்து சொல்லப்பட்டவை. பெருமிதம் கொள்ளத் தக்க தனித்துவமானவர். நிராகரிக்க முடியாதபடி தன்னை பரிபூரணமாக அர்பணித்தவர். சமகாலத்தில் மட்டுமல்ல, எதிர்காலத்திலும் அம்பையின் மொழியானது எந்த இருட்டிலும் கனன்று ஒளிவிடும் உயிர் நெருப்பு.

மரபார்ந்த பெண்ணுக்கு கொடுக்கப்படும் மதிப்புகளை மறுத்தாலும், தன் சுதந்திரத்தை தானே தேடிக் கொள்ளும் பெண்ணின் உரிமைக்காக பேசினாலும், அவர் பெண்மையை மறுத்த பெண்ணியவாதி அல்லர். கர்நாடக சங்கீதமும் பரத நாட்டியமும் தெரிந்தவர். அவருடைய எழுத்து தனித்துவம் வாய்ந்தது. அது வெளிப்படுத்தும் பெண்ணியம் அவருக்கு முந்திய மரபின் அடியொற்றி எழுதிய பெண் எழுத்தாளர்களிடமிருந்து வேறுபட்டது. கலையாக வெளிப்பாடு பெற்றுள்ள குரல் என்று அம்பையினுடையதைச் சொல்லலாம்.

இந்தியப் பெண்களின் பிரச்சனைகள், அவர்களுடைய சமூக அந்தஸ்து ஆகியவை பற்றிய இவரது கட்டுரைகள் பிரபல ஆங்கில சங்கினகளில் வெளியாகியுள்ளன. பெண் இசைக் கலைஞர்கள், நடனமணிகள் பற்றிய இவரது நூல் Singers and the Sang Mirrors and Gestures எனும் இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளது. The Economic and Political Weakly, The Time of Indian Free Press Buetin The Hindu போன்ற இதழ்களில் கட்டுரை களும் நூல் விமர்சனங்களும் எழுதி வருகிறார். பல ஆவணப்படங்களுக்கு ஸ்க்ரிப்ட் எழுதி உதவி இயக்குநராகவும் இருந்திருக்கிறார். பெண்ணின் அறிவை, தெளிவை அவை புறக்கணிக்கப்படும் பேதமையை எளிமையாக சொன்னார் அம்பை.

தன்னைப் பற்றி பெண் வரைகிற சித்திரம் அனைத்தும் பெண்ணியப் படைப்பு ஆகிவிடாது. நுண்ணுணர்வும் அரசியல் தெளிவும் கைகூடி வருபவையே. காலத்தைத் தாண்டி நிற்கும். அந்த வகையில் பீறிட்டுப் பாய்ந்த பெண்ணிய எழுத்துக்களில் அம்பையே முன்னோடி. "ஆணுக்குப் பெண் அடிமை என்னும் முறையையும் அடியோடு மாற்றி, இருபாலரையும் ஒரு நிலை மக்களாக வாழ வைப்பதற்கு வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார் பெரியார்"[13] இப்படி எல்லாம் போராடிய பெரியாரைபோல் தன் எழுத்துக் கள் பெண்ணியத்திற்கு முழுமையாக படைத்தவர் அம்பை.

இலக்கியப் படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளில் ஆணுக்கு நிகரானவளாகப் பெண்ணையும் படைத்து காட்டுவதனை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டதன் விளைவாகவே இன்றைய நிலையில் பெண்ணியம் இலக்கியங்களிலும் வளர்ச்சி நிலையை அடைந்துள்ளது என்று கருதலாம். இன்றைய நிலையில் பெண்ணிய வாசிப்பு என்பது பெண்ணின் வேட்கையை, உணர்வை யதார்த்தப் போக்கில், எடுத்துரைப்பதாக விளங்குகிறது. "பெண்ணிய வாசிப்பு, வாசிப்பரது எல்லைக்குள் சிக்காது எல்லையற்ற பெருவெளிக்கு இட்டுச் செல்கிறது. துயரச் சரித்திரமாகிப் போன, பேசப்படாத மனித வரலாற்றுத் தடயத்தின் அடையாளங்களைப் புலப்படுத்துகிறது."[14] இலக்கியங்களில் மூலமாகத்தான் ஆங்காங்கே உள்ள பெண்களின் நிலையும் பெண்ணியமும் அறிய முடிகிறது. 'தெரஸா பிளிங்டன்' என்னும் பெண்ணியவாதி பெண்ணியம் உலகையே மாற்றி அமைக்கும் இயக்கம் என்ற கூறுகிறார்."[1] தன்னுடைய எண்ணங்க ளையும் எழுச்சிகளையும் அம்பை தன் கதையின் மூலமாக காட்டியுள்ளார்.

உலகம் தோன்றி, யுகங்கள் தோன்றி, உயிர்கள் பலவும் தோன்றிய பின் மானிட குலத்துக்கு பெரிதும் உதவும் வகையாகத் தான் பெண்ணைப் படைத்தான் இறைவன். "பெண் என்ற இரண்டு எழுத்துச் சொல்லை உச்சரித்துப் பாருங்கள். குறுகிய ஓசையுடைய சொல். பெண் அதிக ஓசையுடையவள். அது மட்டுமல்ல உயிர்மெய்யை முதலாகக் கொண்டவள்."[16]

"உயிர் - சக்தி ஆகிய அவள் 'மெய்' ஆகிய (சிவம்) ஆணுடன் இணைந்து 'உயிர்மெய்' ஆகிய இல்லறத்தின் வாழ்க்கை"[17] இதை புரிந்து வாழ்ந்துவிட்டாள் எந்த துன்பங்களும் இல்லை. பெண்களுக்கென இருக்கும் ஆற்றல்கள், அறிவு, திறன்கள் எல்லாவற்றை யும் மறுதலித்து இச்சமூகம் அவளுக்கெனத்

தீர்மானித்து வைத்திருக்கும் அச்சில் அவளை உருக்கி ஊற்றி வார்க்கும் அத்துமீறல்களை அம்பையின் பல கதைகள் அடையாளமாக காட்டுகிறது. புழுவைக் கேவலமாகப் பேசாதீர்கள். அது மண்ணில் வாழ்வதால்தான் பொறுமையின் சிகரமாகவே மாறிவிட்டது. அது ஒரு பெண்ணுக்கும் வேண்டுமென்பதால் தான், "மண்ணையும் பெண்ணையும் பொறுமையிலே ஒன்னுன்னு சொல்லுவாங்க... என்ற உவமையே உருவாயிற்று"[18] இப்படியாக பெண்ணுக்கு என்று இலக்கணம் வகுத்து இப்படி தான் என்று உருவம் வடித்து விட்டதால் என்னவோ அவர்கள் அமைதிக்காக்கின்றனர். இப்படிலும் சில பெண்கள் மாற்றம் அடைந்து தனக்கு என ஒரு தனி அமைப்பை உருவாக்கியவர்கள்.

அம்பையின் பெண்ணிய சிந்தனைகள் முற்றிலும் மாறுபட்ட கோணமாகி இருந்தாலும் முழுமையான பெண்ணிய சிந்தனைகள் அவர் காட்டியுள்ளார்.

## முடிவுரை

பெண்கள் பல துறைகளிலும் முன்னேறியிருக் கின்றார்கள் என்பதும், சமூகத்தின் தேவை களுக்கான போட்டியிட்டுத் தாங்களும் பங்காற்றுமளவுக்கு வாய்ப்பை பெற்றிருக்கி றார்கள் என்பதும் உண்மை.

இப்படி ஒருபுறம் இருந்தாலும் பெண்கள் தன் குடும்ப வாழ்க்கையையும், வெளி வாழ்க்கையிலும் இன்றளவும் பல இன்னல் களை தினம் தினம் சந்தித்துதான் உள்ளனர்.

பல எழுத்தாளர்கள் தன்னுடைய உணர்வு களை, எண்ணங்களை படைப்பின் மூலம் காட்டிதான் உள்ளனர். இந்த வரிசையில் அம்பையும் ஒருவர். பெண்ணிய நோக்கில் பெயர் போனவர் ஆவார்.

தன்னுடைய பெண்ணியப் பார்வையை வித்தியாச எண்ணங்களை அவரின் படைப்பு களில் காட்டியுள்ளார் என்பதனை பெண்ணிய பார்வை என்று இக்கட்டுரை யின் வழி காணலாயின.

## சான்றெண் விளக்கம்

1. அருந்ததி, மீண்டும் நாளை வரும், ப. 41.
2. மேலது., ப. 148.
3. குடும்ப விளக்கு, ப. 9.
4. மேலது.,
5. பெண்களின் பிரச்சனைகளும் உளவியல் தீர்வும், ப. 6.
6. அம்பை, சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை, ப. 167.
7. மேலது.
8. 42 ஆண்டுக் கதைகள், ப. 716.
9. அம்பை, சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை, ப. 716.
10. 42 ஆண்டுக் கதைகள், ப. 754.
11. மேலது., ப. 606.
12. மகளிர் படைப்புகளில் உளவியல் நோக்கு, ப. 27.
13. பெரியாரின் முன்னுரிமை, ப. 42.
14. பெண்ணிய படைப்பிலக்கியம், ப. 247.
15. பாலின சமத்துவம், ப. 30.
16. மகா சக்தி, ப. 7.
17. மேலது.,
18. பெண் என்னும் தத்துவம், ப. 149.

## துணைநூற்பட்டியல்

1. வாஸந்தி, மீண்டும் நாளை வரும், அருந்ததி நிலையம், 19, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை-600 017, முதற்பதிப்பு-1990.
2. பாரதிதாசன், குடும்ப விளக்கு, பூம்புகார் பதிப்பகம், 127-6, எண். 63, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை-600 108.
3. கோமுகி கண்ணா, பெண்களின் பிரச்சனைகளும் உளவியல் தீர்வும், ராஜமாணிக்கம்மாள் பப்ளிகேஷன்ஸ், 106 -4, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை, முதற்பதிப்பு-2017.
4. அம்பை, சிவப்புக் கழுத்துடன் பச்சைப் பறவை, காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி. சாலை, நாகர் கோயில்-629 001, முதற்பதிப்பு-2019.
5. அம்பை, 42 ஆண்டுக் கதைகள் (அம்பை கதைகள்), காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி. சாலை, நாகர்கோவில்-629 001, முதற்பதிப்பு-2016.
6. மூ. மீனாட்சி, மகளிர் படைப்புகளில் உளவியல் நோக்கு, அபிசிவா பதிப்பகம், கோவை-36, முதற்பதிப்பு-2006.
7. என்.டி. சுந்தரவடிவேலு, பெரியாரின் பெண்ணுரிமை, ஹர்ஷா புக் ஹவுஸ், எண். 22-73, காந்தி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033.
8. இரா. பிரேமா, பெண்ணிய படைப்பிலக் கியம், பெண்ணிய சிறுகதைகள் சாகித்ய அகாதெமி ராயல் கலர் பிரிண்டர்ஸ், சென்னை.
9. கல்யாணசுந்தரம், பாலின சமத்துவம் - பெண்களுக்கு, கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை-600 017, முதற்பதிப்பு-2008.
10. ஹோமா இராமானுஜம், மகா சக்தி, பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான்கான் சாலை, சென்னை.
11. முத்துக்குமாரசாமி, பெண் என்னும் தத்துவம் - பெண்ணியம், கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை- 600 017, முதற்பதிப்பு-2015.